‘தூய சக்தி எங்களுக்கு வாக்களியுங்கள்’ என்று சொன்னவர்கள்

இன்று திருட்டு சக்தியாக மாறியிருக்கிறார்கள்!

மதுராந்தகம் தொகுதி – மகளிர் சந்திப்பில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, பேச்சு!



மதுராந்தகம்,அக்.1-

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, நேற்று (30.09.2026) திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கருங்குழிப் பகுதியில் மகளிர் சந்திப்பு நிகழ்வில் பேசினார். அப்போது அவர், இந்த இடைத்தேர்தல் உண்மையில் தேவையான ஒன்றுதானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்தது. தேர்தல் முடிந்து ஒரு ஆட்சி பொறுப்பிற்கு வந்திருக்கிறது; அது அவர்களுக்கும் புரியவில்லை, நமக்கும் இன்னும் தெளிவாகப் புரியவில்லை. அதற்குள்ளாகவே மற்றொரு புதிய இடைத்தேர்தல் ஏன் நடக்கிறது. ஏனெனில், நாங்கள் தூய சக்தி எங்களுக்கு வாக்களியுங்கள் என்று சொன்ன ஒருவர், இன்று திருட்டுச் சக்தியாக மாறிவிட்டார் என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், அந்தத் திருட்டுச் சக்தி என்ன செய்தது. எந்தக் கட்சியை முடிந்துபோன சக்தி, தேவையற்ற சக்தி, தூரத்தில் இருக்க வேண்டிய சக்தி என்று விமர்சித்ததோ, அங்கேயே சென்று இரண்டு பேரைக் கவர்ந்து இழுத்துக்கொண்டு வந்து இன்று இடைத்தேர்தலை உருவாக்கியிருக்கிறது. தாராபுரத்திலும், மதுராந்தகத்திலும் இடைத்தேர்தல் நடக்க வேண்டிய ஒரு அவசியத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இது தானா ஒரு தூய சக்தியின் வேலை. இது தூய சக்தி இந்த வேலையா செய்யும்.

திருட்டுச் சக்தியால் இடைத்தேர்தல்!

தவெக ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டீர்கள். திமுக கூட்டணியில் இருந்த கட்சிகளை எல்லாம் பிரித்து எடுத்துச் சென்று ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். எங்களுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலே நடந்த அந்த கூட்டணியில் போட்டியிட்டு யார் யாரெல்லாம் திமுகவோடு நின்று வெற்றி பெற்றார்களோ, அவர்களை எல்லாம் கூட்டிச் சென்று இன்று ஆட்சியை நடத்துகிறீர்கள். அத்துடன் விட்டிருக்கலாம். ஆனால், அந்தத் திருட்டுச் சக்தி வேட்பாளர்களைத் திருடி, மக்கள் பிரதிநிதிகளைத் திருடி இன்று இந்த இடைத்தேர்தலை நடத்த வேண்டிய அவசியத்தை உருவாக்கியிருக்கிறது.

நம்முடைய தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின், வழக்கறிஞர் பரந்தாமன் அவர்களைத் தேர்ந்தெடுத்து உங்கள் கரங்களிலே ஒப்படைத்திருக்கிறார்கள். பரந்தாமனைப் பற்றி நான் உங்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், எல்லாரும் தொலைக்காட்சியைத் திறந்திருந்தீர்கள் என்றால் பரந்தாமனைப் பார்த்திருப்பீர்கள். எப்போதும் யாராவது ஒருவருடன் தொலைக்காட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, கழகத்தின் கொள்கைகளுக்காகச் சண்டை போட்டுக் கொண்டிருப்பார். உறுதியோடு, தெளிவோடு அங்கே பேசத் தெரிந்த ஒருவரைத்தான் நம்முடைய அண்ணன் உங்களிடத்திலே வேட்பாளராக அறிவித்திருக்கிறார்.

பரந்தாமன் தொலைக்காட்சியில் மட்டும் சண்டை போட மாட்டார்; சட்டமன்றத்திற்குச் சென்றாலும் மிகத் தெளிவாக உங்களுக்காகப் போராடக்கூடிய ஒருவர். அதனால், நம்முடைய பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும், திமுகவிற்கு வாக்களித்தீர்கள் என்றால், வாக்களித்த நபர் திமுகவிலேயே தான் இருப்பார். அதிலும் பரந்தாமன் திமுகவைத் தாண்டி எந்தப் பக்கமும் செல்கிற ஆள் இல்லை. இவர்கள் அழைத்தார்கள், அவர்கள் அழைத்தார்கள், மதுரையில் அழைத்தார்கள், கன்னியாகுமரியில் அழைத்தார்கள், பரந்தூரில் அழைத்தார்கள் என்று சொல்லிவிட்டு எங்கேனும் ஓடுகிற ஆள் இல்லை. அதனால், தெளிவாகச் சிந்தித்து நீங்கள் அளிக்கும் வாக்கிற்கு ஒரு நியாயம் கிடைக்க வேண்டும் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, நம்முடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய வேட்பாளருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்.

தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள்!

வாக்களித்தவர்கள் ஓடிவிட்டார்கள் என்பதற்காக பரிதாபப்பட்டு வாக்களித்தால் இன்னொரு முறை மீண்டும் ஒரு இடைத்தேர்தல் வரும். அதனால் அதிமுகவிற்கு வாக்களித்தீர்கள் என்றால், மறுபடியும் இதேதான் நடக்கும். ஏனெனில், திமுகவில் இங்கே மேடையில் இருக்கக்கூடிய அண்ணன் வேலு சந்திக்காத வழக்குகள் இல்லை. அடிக்கடி அவர் வீட்டிற்கு வருமான வரி சோதனையிட வருபவர்கள் காபி சாப்பிடு செல்வது போல சோதனைகளுக்கு வந்துவிடுகிறார்கள். வாயைத் திறந்து பேசினாலே வழக்கு. எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்கு, அவரைக் கைது செய்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரைக் கைது செய்து கொண்டு சென்று இரண்டு வாரங்கள் சிறையில் வைக்கிறார்கள். சிறுவர்கள் யாராவது சமூக வலைதளங்களில் கருத்துப் பதிவிட்டால், அவர்களைப் பிடித்துச் சென்று சிறையில் அடைத்துத் துன்புறுத்துகிறார்கள்.

இத்தனையும் தாண்டி திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒருவர் கூட தடம் மாறச் சிந்திக்கக்கூட இல்லை. அதுதான் தலைவர் கலைஞர் வளர்த்த இயக்கம், பேரறிஞர் அண்ணா தொடங்கிய இயக்கம், இன்று நம்முடைய தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய இயக்கம். அதனால் உறுதியோடு இருக்கக்கூடியவர்களுக்கு வாக்களியுங்கள். உங்களுடைய வாக்கு உதயசூரியன் சின்னத்தைத் தவிர வேறு எந்தப் பக்கமும் சென்றுவிடக் கூடாது என்பதில் தெளிவாக நீங்கள் இருக்க வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முதலமைச்சரை அதிகமாக விமர்சிக்க முடியாது. ஏனெனில், அவர் நமக்கு சொந்தமாகிவிட்டார். ஏனெனில், அவர் எங்களுடைய அண்ணனை மை டியர் அங்கிள் என்று அன்பாக அழைக்கிறார். அதனால் நானும் அவரை அன்புத் தம்பி விஜய் என்று அழைக்கலாம் என்று இருக்கிறேன். இல்லையென்றால் அவருக்குப் புரிகிற பாஷையில் ப்ரோ, ஸ்வீட் ப்ரோ என்று அழைக்கலாம் என இருக்கிறேன்.

தேர்தலுக்கு முன்னாடி ஸ்வீட் ப்ரோ என்ன செய்தார். உங்களிடம் மட்டும் வாக்கு கேட்கவில்லை; உங்கள் வீட்டில் இருக்கிற குழந்தைகளிடமும் வாக்கு கேட்டார். வீட்டில் இருக்கக்கூடிய குழந்தைகளிடம் யாரும் வாக்கு கேட்கக் கூடாது. வீட்டில் போய் அடம் பிடியுங்கள், சாக்லேட்டிற்கு அடம் பிடிக்கிறீர்களா, விளையாட்டு சாமான்களுக்கு அடம் பிடிப்பதை போல பெரியவர்களிடம் அடம் பிடித்து விஜய் மாமாவிற்கு ஓட்டு போடச் சொல்லுங்கள் என்று சொல்லி குழந்தைகளைத் தூண்டிவிட்டார். அதற்குக் வழக்கு நடக்கிறது. வழக்கறிஞரிடம் என்ன சந்தேகம் இருந்தாலும் நீங்களும் கேட்டுக்கொள்ளலாம், அவர் இங்கேயேதான் இருப்பார்.

அப்படி குழந்தைகளைத் தூண்டிவிட்டு எனக்கு வாக்களியுங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த குழந்தைகளைப் பற்றி எந்த அக்கறையும் அவருக்கு கிடையாது. மதுராந்தகத்திற்கு முதலமைச்சர் வருகிறார் என்றால் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டும், நாங்கள் தவறென்று சொல்லவில்லை. ஆனால், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தவர்கள் அங்கே நடந்த அநியாயங்களை மூடி மறைக்க நினைத்ததுதான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கொடூரமான ஆட்சி நடக்கிறது!

கடந்த 25ஆம் தேதி மதுராந்தகத்திற்கு வருகிறார், வண்டலூர் அருகே பத்தாம் வகுப்பு படிக்கும் ஒரு குழந்தை. பள்ளிக்கூடத்தில் அந்தக் குழந்தையைத் தூக்கிச் சென்று மயக்க மருந்து கொடுத்துப் பாலியல் துன்புறுத்தல் நடைபெறுகிறது. முதலமைச்சர் வரும் வழியில் ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்டது என்று வெளியே தெரியக் கூடாது என்பதற்காக, அந்த குழந்தையின் மீதே பழி போடுகிறார்கள். அந்த குழந்தை பத்தாம் வகுப்பு கணக்குத் தேர்வுக்குப் பயந்துகொண்டு பொய் சொல்கிறது என்று சொல்லக்கூடிய ஒரு கொடூரமான ஆட்சிதான் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி.

மறுநாளான 26ஆம் தேதி இன்னொரு குழந்தையைக் கடத்திச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குகிறார்கள். இதுவரைக்கும் அந்த வழக்கில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று அதிகாரிகள் நமக்குச் சொல்லவே இல்லை. முதலமைச்சர் வார்த்தைக்கு வார்த்தை நண்பாஸ், நண்பீஸ் என்று சொன்னாரே, அந்த நண்பீஸுக்கு அநீதி இழைக்கப்படும்போது ஒரு வார்த்தை கூட அவர் சொல்லவில்லை.

ஆனால், இன்று காலை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அந்தத் தாய்க்குத் தொலைபேசி மூலமாக உங்களுக்கு என்ன வேண்டும் என்றாலும் நான் செய்து தருகிறேன், தைரியமாக இருங்கள், நான் உங்களோடு இருக்கிறேன் என்று ஆறுதல் கூறினார். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்காகச் சிந்திக்கக்கூடிய, அவர்களுடைய வலிகளைத் தன் மனதில் ஏந்தக்கூடிய ஒரே தலைவன் எங்களுடைய தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின்.

ஆனால், அந்தப் பிள்ளைகளிடம் வாக்கு கேட்ட நம்முடைய விஜய் ப்ரோ எங்கே போனார் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பெண்கள் எல்லாம் சாலையில் நடக்க முடியவில்லை, பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை என்று கூறினார்.. ஆனால், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) தகவலின்படி தமிழ்நாடு தான் விஜய் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பெண்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பான ஒரு மாநிலம் என்று சொல்லுகிறது.

பெண்களுக்குப் பாதுகாப்பில்லை, குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லை, யாருக்கும் கவலையில்லை, ஆட்சி மாற்றம் வர வேண்டும், நான் வந்தால் குற்றம் நடந்தாலும் மேலிருந்து குதித்து வந்து காப்பாற்றிவிடுவேன் என்றார். அதனை நம்பி நிறைய சகோதரிகள் வாக்கும் போட்டார்கள்.

ஆனால், இன்று ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களில் 500க்கும் மேற்பட்ட குற்றச் சம்பவங்கள், 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட பாலியல் வன்கொடுமைகள், 200க்கும் மேற்பட்ட கொலைகள், 8 லாக் அப் மரணங்கள், 10 ஆணவக் கொலைகள் என இதுதான் இந்த தவெக ஆட்சியினுடைய சாதனை.

ஆனால், இந்தக் கணக்கு நான் சொன்ன கணக்கு நேற்றைய கணக்கு. இன்று ஒரே நாளில் ஒன்பது குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரே நாளில் ஒன்பது குற்றங்கள்; காலையிலிருந்து மாலை வரை ஒன்பது குற்றங்கள். கடைசியான குற்றம், புழல் ஏரி அருகில் மூன்று இளைஞர்கள் மது குடித்துவிட்டுச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரைக் கூப்பிடுவது, யாரைக் கூப்பிடக்கூடாது என்று சொல்லிச் சண்டை போட்டு ஒரு பையனை வெட்டிக் கொலை செய்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வில் சாதனை படைத்துள்ளது!

இந்த ஆட்சியில் ஒரே ஒரு சாதனைதான் செய்தார்கள் என்ற பெருமை இவர்களுக்கு இருக்கிறது. நம்முடைய தலைவர் சொல்வது போல, மின்வெட்டிற்கும் அருவாள் வெட்டிற்கும் தான் போட்டி. இன்னொரு சாதனை என்னவென்றால், தேசிய சராசரியை விட எப்போதுமே தமிழ்நாடு உயர்வாக இருக்கும். எல்லாவற்றிலும் கல்வியாக இருந்தால் முதலில் இருக்கும்; அல்லது சுகாதாரமாக இருந்தால் அதில் முன்னிலையில் இருக்கும்; பெண்கள் பாதுகாப்பு என்றால் முன்னணியில் இருக்கும்; தொழில் முதலீடுகள் வருவதில், வளர்ச்சியில் முதலில் இருக்கும்; பெண்கள் வேலைக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குவதில் தமிழ்நாடுதான் முதலில் இருக்கும். ஆனால் இப்போது இல்லை, நம்முடைய ஆட்சியில் இருந்தது.

ஆனால், இன்று தேசிய சராசரியை விட தமிழ்நாடு அதிகமாக இருப்பது ஒரே ஒரு விஷயத்தில்தான். அது விலைவாசி உயர்வு, தேசிய சராசரி 4.4%. தமிழ்நாட்டின் சராசரி 5.44% ஆக உயர்ந்துள்ளது.

நான் இதை உங்களுக்கு அதிகமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் கூடக் கிடையாது. ஏனெனில், பொன்னி அரிசி 50 ரூபாய்க்கு விற்றது, இப்போது 85 ரூபாயிலிருந்து 90 ரூபாய்க்கு விற்கிறது. இட்லி அரிசி 43 ரூபாய்க்கு விற்றது இப்போது 71 ரூபாய். சூரியகாந்தி எண்ணெய் ஒரு லிட்டர் 115 ரூபாய் இருந்தது, இப்போது 80 ரூபாய் அதிகமாகி கிட்டத்தட்ட 195 ரூபாய். சர்க்கரை 44 ரூபாய் இருந்தது, இப்போது 65 ரூபாய். வெங்காயம் கிலோ 35 ரூபாயிலிருந்து இப்போது கிலோ 60 ரூபாய். தக்காளி 18லிருந்து மிகவும் வேகமாகச் சென்று 40, 50, இன்று 60 ரூபாய்.

விஜய் ஆட்சியில் உளுத்தம் பருப்பு 120லிருந்து 150. கடலைப்பருப்பு 80லிருந்து 100. தனியா 160லிருந்து 250. இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் போய்க் கொண்டே இருக்கலாம். இந்த விலைவாசிதான் அவருடைய ஆட்சியில் செய்திருக்கக்கூடிய ஒரே சாதனை.

இதைவிடப் பெரிய சாதனை என்னவென்றால், உங்களுக்கெல்லாம் 100 யூனிட் இலவச மின்சாரம் என்றார்கள். இப்போது மின்சாரமே இல்லை, அப்புறம் எங்கே இலவச மின்சாரம் கொடுப்பது. மின்சாரமே இல்லாமல், முதலில் 500 ரூபாய் வந்த மின்கட்டணம் இப்போது 5000 ரூபாய், 6000 ரூபாய் வருகிறது. மின்சாரமும் இல்லை, நான்கு மணி நேரம் மின்வெட்டு என்பது சாதாரண விஷயமாக மாறிவருகிறது.

ஆனால் ஒன்றே ஒன்று நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அமைச்சர் சொல்லியிருக்கிறார், பஞ்சாப்பில் 15 மணி நேரம் மின்வெட்டு. அதனால் தமிழ்நாடே கிட்டத்தட்ட 15 மணி நேரம் மின்வெட்டு, இல்லையென்றால் அந்த சாதனையை முறியடிக்க வேண்டும் என்பதற்காக 20 மணி நேரம் மின்வெட்டு வந்தாலும் வரும். அதனால் தாய்மார்கள் தயவுசெய்து பத்திரமாக இருங்கள். இலவசமாக மின்சாரம் தருகிறோம் என்றவர்கள் இன்று மின்கட்டணத்தைதான் அதிகரித்திருக்கிறார்கள்.

100 நாள் வேலை பாதியாக குறைப்பு!

ஆனால் வருமானம் இருக்கிறதா என்றால் கிடையாது. 100 நாள் வேலை யாருக்காவது கிடைக்கிறதா. பெரிய அளவில் நான் மக்களுக்காகப் போராடுவேன், நான் சினிமாவில் போராடியது போலப் போராடுவேன் என்றெல்லாம் சொல்லிவிட்டு ஆட்சிப் பொறுப்புக்கு ப்ரோ விஜய் வந்தார். டெல்லியில் கொண்டுவந்த மசோதாவை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று நாடாளுமன்றத்தில் பிரதமர் இருக்கக்கூடிய அரங்கத்திலே, அமித்ஷா இருக்கக்கூடிய இடத்திலே தெளிவாக திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்துப் போராடியது. நம்முடைய முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தீர்மானம் போட்டார்.

ஆனால், நீங்கள் என்ன செய்தீர்கள். வாயை மூடிக் கொண்டு பாஜக அரசாங்கம், மோடி என்ன மசோதாவைக் கொண்டு வந்தாரோ, என்ன சட்டத்தைக் கொண்டு வந்தாரோ அதை ஏற்றுக்கொண்டு, இன்று தமிழ்நாட்டிற்குக் கிடைத்துக் கொண்டிருந்த 100 நாள் வேலையில் பாதியை குறைத்திருக்கிறீர்கள்.

இதனை டெல்லியில் இருக்கக்கூடிய கணக்குகளை, தரவுகளை எடுத்துப் பார்த்து அதன் ஆதாரத்தில்தான் சொல்கிறேன்; இதுவரைக்குமே இந்த ஆண்டிலேயே 50% தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய வேலை குறைக்கப் பட்டிருக்கிறது. சம்பளமும் கிடையாது.

அதைவிட சுறா என்று ஒரு திரைப்படத்தில் விஜய் நடித்தார். அனைவரும் அவரை மீனவர், மீனவர்களின் நண்பர், மீனவர்களுக்காகப் போராடுவார் என்றார்கள். இப்போது பட்டினப்பாக்கத்தில் மீனவர்கள் குடியிருக்கக்கூடிய இடத்தில் சென்று புதிய சட்டமன்றத்தைக் கட்டுகிறாராம். அங்கே இருக்கக்கூடிய மீனவர்கள் சொல்கிறார்கள், குழந்தைகள் சொன்னார்கள் என்று நம்பி இவருக்கு வாக்களித்தோம்; இன்று இப்படி நாங்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி எங்களைக் கொன்று புதைத்தால் கூட பரவாயில்லை, நாங்கள் இங்கிருந்து நகர மாட்டோம் என்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் ஒடுக்கப்பட்ட, பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு செய்யக்கூடியது.

பரந்தூரில் விமான நிலையம் வேண்டாம், விவசாயிகளுக்காக நாங்கள் அதை விட்டுவிடுகிறோம் என்றார்கள். இப்போது விமான நிலையத்தை எங்கே கொண்டுவரப் போகிறார்கள் தெரியுமா, செய்யூர். இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாயிகள் இல்லையா. நீங்கள் பாதிக்கப் பட மாட்டீர்களா, இங்கே இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் பாழாகாதா?

மக்களுக்கு செய்வதனால் கஜானா காலியாம்!

விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்கிறேன் என்றார். அதற்குப் பிறகு விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் கிடையாது. அதேபோல 2500 ரூபாய் இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளுக்குத் தருகிறேன் என்றார். எங்களுடைய தலைவர் சொன்னபடி 1000 ரூபாயைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தந்தார். ஆனால் 2500 ரூபாயைப் பற்றிப் பேச்சு மூச்சே இல்லை. 4000 ரூபாய் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு என்றார். தனுஷ் தான் அரசியலுக்கு வந்திருக்கிறாரே தவிர, வேலையில்லாத பட்டதாரிக்கு 4000 ரூபாய் பணம் இன்னும் வரவில்லை. கரும்பிற்கு 4500 ரூபாய் கொடுக்கிறேன் என்றார், அதுவும் வரவில்லை. நெல்லிற்கு விலையை உயர்த்தித் தருகிறோம் என்றார்கள், 150 ரூபாய் உயர்த்திவிட்டு அதோடு விட்டுவிட்டார்கள். இப்படி யாருக்குமே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல், ஏன் என்று கேட்டால் பணம் இல்லை, கஜானா காலி என்கிறார்கள். மக்களுக்குக் கொடுக்க வேண்டிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குக் கஜானா காலி. ஆனால், 1200 கோடியில் பட்டினப்பாக்கத்தில் மீனவர்களுடைய வாழ்க்கையை நிர்மூலமாக்கிவிட்டு கட்ட வேண்டும் என்று துடிக்கக்கூடிய அந்த கட்டிடத்தைக் கட்டுவதற்கு மட்டும் 1200 கோடி ரூபாய் இருக்கிறது. புதிய தலைமைச் செயலகம் கட்டப்போகிறீர்களே, எதற்கு. ஏற்கனவே 7 கோடி ரூபாய்க்கு உங்களுடைய ஜோசியக்காரர் சொன்னார் என்று செய்த பணிகள் என்ன ஆயிற்று.

உங்கள் நண்பருடைய ரேஸ் கார் பந்தயத்தைப் பார்க்க வேண்டும் என்று இங்கிருந்து எல்லாரையும் கூட்டிச் சென்று லண்டனுக்குப் போகிறீர்கள். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஊராவுட்டு வீட்டு நெய்யில் இனிப்பு செய்யாதீர்கள் என்றார். இப்போது நீங்கள் என்ன காராபூந்தியா செய்துகொண்டிருக்கிறீர்கள்.

தந்தை பெரியார் மானமுள்ள ஆயிரம் பேரிடம் சண்டை போடலாம், மானத்தைப் பற்றி கவலைப்படாத ஒரு ஆளிடம் கூட சண்டை போட முடியாது என்று கூறுவார். அந்த அரசாங்கத்தில் இப்போது அமைச்சர்களாக இருந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அரசாணை என்பது அரசாங்கம் ஒரு ஆணையை வெளியிடுகிறது என்றால், எல்லாவற்றையும் யோசித்துவிட்டு, முதலமைச்சரிடம் ஆலோசனை செய்து, எல்ஒரு அரசனை வருவது முதலமைச்சருக்குத் தெரியுமா, இல்லையா? அவருக்கு தெரியாமல் அரசாணை வராது.

ஆனால், இந்த அரசாங்கத்தில் எத்தனை அரசாணைகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன என்று யோசித்துப் பாருங்கள். ஜோதிடர்தான் பட்டினப்பாக்கத்தில் கடலைப் பார்த்து நீங்கள் ஒரு கட்டிடம் கட்டி அங்கே அமர்ந்தீர்கள் என்றால் நாட்டின் பிரதமர் ஆகிவிடலாம் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார்.

வாபஸ் வாங்கும் அரசு!

அந்த ஜோசியக்காரர் பெயர் ரிக்கி ரத்தன் பண்டிட். அவருக்கு முதலமைச்சரின் அரசியல் பிரிவில் சிறப்பு அதிகாரியாக நியமிப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. எல்லாரும் கடுமையாக விமர்சித்தார்கள் என்றவுடன் அதைத் திரும்பப் பெற்றார்கள்.

அப்புறம் மாணவர்கள் போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது என்று ஒரு அரசாணை வெளியாகி எல்லாரும் அதை எதிர்த்துப் போராடியதால் அதைத் திரும்பப் பெற்றார்கள். இடதுசாரிகள் தயவில்தான் நீங்கள் ஆட்சியே நடத்துகிறீர்கள்; அவர்களைப் பற்றிக் கணக்கெடுப்பதற்கு ஒரு அரசாணை, அப்புறம் அதைத் திரும்பப் பெற்றார்கள்.

காலை உணவுத் திட்டத்தை நான் போடுகிறேன், நான் போடுகிறேன் என்றார். எங்களுடைய முதலமைச்சர் கொண்டுவந்ததுதான் காலை உணவுத் திட்டம். அதை விரிவாக்கம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, பள்ளித் தலைமை ஆசிரியர் அதற்குப் பணம் கொடுக்க வேண்டுமாம். அப்புறம் எதற்கு அரசாங்கம், அதற்கு ஒரு அரசாணை; அப்புறம் அது ஒரு பெரிய பிரச்சினையானவுடன் அதைத் திரும்பப் பெற்றார்கள்.

அதேபோல் தூய்மைப் பணியாளர்களை 12 மாநகராட்சிகளில் தனியாருக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னதில் போராட்டம் வெடித்து அதைத் திரும்பப் பெற்றார்கள். சென்னையில் சொத்து வரி உயர்வு என்று சொல்லி அரசாணை வெளியிட்டு, அது திரும்பப் பெறப்பட்டது. செய்யாறு அருகே தொழிற்பூங்கா விரிவாக்கத்திற்காக அறிக்கை வெளியிடப்பட்டு, அது திரும்பப் பெறப்பட்டது.

அப்புறம் இந்த அரசாங்கத்தில் பொதுத்துறையில் யாருமே கேள்வி கூட கேட்கக் கூடாது என்று சொல்லி, தகவல் அறியும் உரிமைச் சட்ட (RTI) உரிமையைப் பறிக்கக்கூடிய ஒரு அரசாணை போடுகிறார்கள். அதற்கு எதிர்ப்பு வந்தவுடன் அதைத் திரும்பப் பெறுகிறார்கள். இப்போது புதிய தலைமைச் செயலக ஆணையைத் திரும்பப் பெறுவதா இல்லையா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று சன் டிவியில் ஒரு விவாத மேடை நடக்கிறது. அதில் பட்டினப்பாக்கத்தில் அந்த மீனவர்களுக்கு எதிராக ஒரு அரசாணை வெளியிட்டு இருக்கிறீர்களே, இது நியாயமா என்று கேட்கிறார்கள். அதற்கு தவெகவை சார்ந்தவர் சொல்கிறார், நாங்கள் ஒன்றுமே செய்யவில்லையே, அரசாணைதானே வெளியிட்டு இருக்கிறோம், அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் சரியாக போகிறது என்கிறார்.

இதை கேட்டு எல்லாரும் சிரித்துவிட்டார்கள். அரசாணை என்றால் சாதாரண விஷயம் இல்லை. அதற்கு அவர், நிறைய அரசாணைகளை நாங்கள் திரும்பப் பெற்றிருக்கிறோம், அதனால் இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை, அரசாணைதானே, திரும்பப் பெற்றுக்கொள்கிறோம், அதைப்பற்றி ஒன்றும் பிரச்சினையில்லை என்றார்.

அப்போதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது, மானமுள்ள ஆயிரம் பேரிடம் சண்டை போடலாம், மானத்தைப் பற்றி கவலைப்படாத ஒருவனுடன் கூட நம்மால் சண்டை போட முடியாது. அதுதான் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய தவெக.

மக்களோடு இருக்கும் இலட்சணம்!

இன்றைக்குக் கூட முதலமைச்சர் அன்புத் தம்பி விஜய் அவர்கள் பேசும்போது, அண்ணா மக்களிடம் செல்லுங்கள், மக்களோடு இருங்கள் என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் மக்களோடுதான் இருக்கிறோம். நீங்கள்தான் மக்களோடு வர முடியாத ஒரு தூரத்தில், மக்கள் சந்திக்கவே முடியாத ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

மக்களோடு இருக்கக்கூடிய ஒருவர், 41 பேர் இறந்து போன போது ஓடி ஒளிந்திருக்க மாட்டார். எங்களுடைய தலைவரைப் போல நடுஇரவாக இருந்தாலும் ஓடிப்போய் அந்த 41 குடும்பங்களுக்கும் ஆறுதல் சொல்ல ஓடியிருப்பீர்கள். நீங்கள் மக்களோடு இருந்த லட்சணத்தை இப்போது மதுரையில் கூடப் பார்த்தோம். ஒரு வருடம்தான் ஆகிறது, அந்த ஒரு வருடத்தில் கூட அந்த இறந்தவர்களின் வலி ஆறுவதற்கு முன்னால், மறுபடியும் நீங்கள் கூட்டி வைத்த கூட்டத்தில் குழந்தைகள் உட்பட 15 பேர் மறுபடியும் மருத்துவமனையில் போய் சேர வேண்டிய ஒரு நிலை. அதைப்பற்றி எந்தவிதமான ஒரு வருத்தமும் கிடையாது; தான் செய்திருக்கக்கூடிய தவறினை நினைத்து ஒரு மன்னிப்பு கேட்கக் கூட மனமில்லாத ஒருவர், மக்களைப் பற்றி, மக்களோடு இருப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்

திரைப்படங்களில் வேண்டுமானால் ஓடோடி வந்து காப்பாற்றக்கூடிய கதாநாயகனாக இருக்கலாம். உண்மையிலேயே இன்று கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய உண்மையான வேஷம் வெளியே வந்து கொண்டிருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய சகோதரிகள் அதை உணர்ந்துகொண்டு, உங்களோடு நிற்கக்கூடியவர்கள், உங்களுக்காக உழைக்கக்கூடியவர்கள், தமிழுக்காக உழைக்கக்கூடியவர்களை தேர்வு செய்யுங்கள். இந்த ஆட்சியில் தமிழ்த்தாய் வாழ்த்தே மூன்றாவது இடத்திற்குப் போய்விட்டது, எதிர்த்துக் கேட்பதற்குத் துப்பில்லை, தைரியம் இல்லை. இவர்களை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு, நம்முடைய பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து, இந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நீங்கள் ஒரு வழி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.




மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பூத் எண் 119 இல் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன் தலைமையில் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தனர். உடன் மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் நூருல் அமீன். வட்டகழக செயலாளர். ரவி. வழக்கறிஞர் ஆர்கே தம்பிதுரை. நகர் மன்ற உறுப்பினர்கள் சம்பத் குமரன் கண்ணன் சாகுல் ஜெயக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட திமுகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கரிக்கிலி, வேடந்தாங்கல், வெள்ளப்புத்தூர் ஆகிய மூன்று ஊராட்சிகளில் உள்ள 7 பாகங்களுக்கான, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட திமுக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிமனையை நேற்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பார்வையிட்டு, நடைபெற்று வரும் தேர்தல் பணிகள் குறித்து கழக நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, தேர்தல் களப்பணிகள் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். இந்நிகழ்வின் போது கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி, சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள் இருந்தனர்.